நன்றி, கடலிலே மீன் பிடிப்பவர்களுக்குத் தேவையான மரங்களை அங்குள்ள விவசாயிகள் தாராளமாக பயிர்செய்து நல்ல முறையிலே அதை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக மரங்களை நடும்போது அதை நன்கு பராமரிக்க வேண்டும். அதை ஒழுங்காக பராமரிப்பு செய்ய முடியாத காரணத்தால், அரசாங்கத்திலே நடக்கூடிய இந்த மென்மையான மரங்கள் நல்ல விலைக்குப் போகிற நிலையில் பெரிதாக வளர்க்க முடியவில்லை. ஆகவே மீண்டும் கருணை கூர்ந்து நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா, அந்த இடங்களில் தேக்கு மரம் நட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 50 ஹெக்டேர் நிலப் பரப்பிலே மட்டும்தான் இந்த மென்மையான மரங்கள் நடப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களை நாங்கள் நேரிடையாகப் பார்வையிட்டு தேக்கு மரங்களை நடுவதற்கு அது தகுதியான இடமாக இருக்குமேயானால் நமது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், வினா எண் 441, திரு வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்,

441—

கணபதி பாளையம் நெசவாளர்கள் வீடுகளில் கூடுதலாக சமையலறை கட்ட கடன் வழங்கல்.

*5212 திரு, வ, சத்தியமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கணபதிபாளையம் நெசவாளர்களுக்கு ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் கூடுதலாக சமையலறை ஒன்று கட்டிக் கொள்ள கடன் கேட்டுள்ளார்களா ?.

(ஆ) ஆம் எனில், சமையலறை கட்ட கடன் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை

திரு. வ. சததியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் மூலம் கட்டிக் கொடுக்கும் வீடுகள் எல்லாம் சமையல் அறையைச் சேர்ந்த ஒரு திட்டமாக இருக்கிறது. ஆனால் இதற்கு முன்பு கொடுத்த வீடுகளில் சமையல் அறை இல்லாத வகையில்-சமையல் அறையும் கைத்தறியும் ஒரே இடத்தில் இருப்பதால் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு புதிதாக சமையல் அறையை கட்டிக் கொள்வதற்கு அரசு கடன் வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியில் கேட்டது கோவை மாவட்டம் குறித்து. இருந்தாலும் வீடு அபிவிருத்திக்காக கட்டுகிறபோது, ஹட்கோ கடன் நிதி உதவி ரூ. 3,150-ம் மைய அரசு மானியமாக 800 ரூபாயும், தமிழகத்தின் மானியமாக 200 ரூபாயும் மொத்தமாக ஒரு வீட்டுக்கு 4,150 ரூபாய் வீதம் வழங்கி இருக்கிறது. அதற்கு மனு செய்வார்களேயானால் அவைகள் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்

திரு. வி பி. சந்திரசேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் கணபதி பாளையம் என்பது என்னுடைய, பொள்ளாச்சி தொகுதியிலே இருக்கிறது அங்கே நெசவாளர்களுக்கு கட்டி கொடுக்கப்பட்டு இருக்கின்ற வீடுகளில் சமையல் அடுப்புகளும் தறியும் ஒரே இடத்தில் இருக்கின்ற காரணத்தினாலே விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களில் முறையாக அவர்கள் கட்டியிருக்கிறார்கள். ஆகவே புதிய திட்டத்தின்படி அவர்களுக்கு கட்டி கொடுக்கப்பட்டிருக்கின்ற வீடுகளில் சமையல் அறை கட்டுவதற்காக கடன்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணபதி பாளையம் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள நெசவாளர்களுக்கு 120 உறுப்பினர்களுக்கு வீடு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளை அபிவிருத்தி செய்வதற்காக ஹட்கோ நிதி உதவியுடன் கடன் உதவி வழங்கப்படுகிறது, 120 வீடுகளுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு ஒப்பு

1992 ஏப்ரல் 2]

தலும் பெறப்பட்டுள்ளது. ஹட்கோ கடன் மற்றும் மத்திய மாநில மானியம் கிடைக்கப் பெற்றதும் சங்கத்திற்கு பணம் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 442, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

442—

கொடுமுடியில் மேம்பாலம் கட்டுதல்.

*4747 திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு—திருச்சி செல்லும் சாலையில் கொடுமுடியில் ஒரு மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை முடித்து சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்ற தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவியினுடைய ஆட்சியிலே ''இல்லை'' என்ற சொல்லுக்கு இடமில்லாத சூழ்நிலையிலே கொடுமுடி நகரத்தினுடைய இந்த மேம்பாலம் மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி கொடுமுடியை ஒரு தீவு போல மாற்றி ஒரு புறம் காவேரி ஆற்றுக்கரை, மூன்று புரங்களில் புகை வண்டியினுடைய ரயில்வே கேட்டுகள் இடையிலே தவித்துக் கொண்டிருக்கின்ற $3\frac{1}{2}$ இலட்சம் மக்கள் பெருந்தலைவர் காமராஜர் வந்த போதும், புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர். வந்த போதும், இதய தெய்வம் நடமாடும் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வந்த போதும் அரை மணி நேரம் அங்கு காத்து நிற்க வேண்டிய ஒரு இழிநிலை ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே அவசரமாக கொடுமுடியை விட்டு வெளியே வரக்கூடிய